மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு.கு.ப. கிருஷ்ணன் : இச்சட்ட முன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத் தக்கதாக்குதல்) சட்ட முன் வடிவு, 1992.

மாண்புமிகு பேரவை தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருததம் மற்றும் செல்லத்தக்க தாக்குதல்) சட்ட முன் வடிவு. இதனைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : இச்சட்ட முன் வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11.00

7. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது மேலும் விவாதம். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இங்கே 5 நாட்கள் விவாதம் நடைபெற்றிருக்கிறது. இறுதிக் கட்டமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவாதத்திற்குப் பதில் அளிப்பதற்கு முன்னால் எதிர்க் கட்சிகளின் கருத்துக்களைத் தொகுத்துக் கூற நான் அழைக்கப் பட்டிருக்கிறேன். ஆளுநர் மத்திய அரசாங்கத்தினுடைய ஏஜண்ட்டாகச் செயல் படுகிறார் என்கிற ஒரு தரப்பாரின் வாதத்தைத் தகர்த்தெறியும் விதத்திலே ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. தமிழக அமைச்சரவை நம்முடைய முதல் அமைச்சரின் தலைமையிலே விவாதித்து, ஆழ்ந்த பரிசிலனைக்குப் பின்னர் தயாரித்து அளித்திருக்கிற உரையை அப்படியே இந்த மன்றத்திற்கு ஆளுநர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அமைச்சரவைக் கருத்துக்கு மேல் தன்னுடைய கருத்தைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபடாமல் கண்ணியத்தையும் மரபையும் அவர் காப்பாற்றி இருக்கிறார். அதற்காக இந்த அவை ஆளுநருக்கு தன்னுடைய நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறது. பல இடங்களில் முதலமைச்சரைக் குறிப்பிட்டுப் பாராட்டும் வகையில் பேசி இருப்பதை ஒரு சில ஏடுகள் குறை கூறியிருக்கின்றன. ஆனால் அதுவும் மரபு வழியே நடைபெற்றிருக்கிறது என்பதால் ஆளுநரைக் குறை சொல்வது அர்த்தமற்றது என்று ஆகிவிட்டது.

இங்கிலாந்து நாட்டு பாராளுமன்ற நடைமுறையைத்தான் இங்கே நாம் பின்பற்றுகிறோம். அங்கே மன்னர் இருப்பது போல இங்கே ஜனாதிபதி, ஆளுநர் இருக்கிறார்கள். அரசு செய்யும் எந்தத் தவறுக்கும் அங்கே அரசரைப் பொறுப்பாக்க